# கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

திருமதி.கா. ரங்கநாயகி
மாண்புமிகு மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர் -641 001

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்
மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

மாண்புமிகு பாராளுமன்ற
உறுப்பினர்கள்,
(கோயம்புத்தூர் மற்றும்
பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

மாண்புமிகு சட்டமன்ற
உறுப்பினர்கள்,
(கவுண்டம்பாளையம்,
கோயம்புத்தூர் வடக்கு,
தொண்டாமுத்தூர்,
கோயம்புத்தூர் தெற்கு,
சிங்காநல்லூர் மற்றும்
கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்).

**திருவள்ளுவர் ஆண்டு 2057 / விசுவாவசு வருடம் / தை மாதம் 29**

**ந.க.எண் : 971/ 2026 / எம்சி. 8 நாள் 12.02.2026**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி – 2026-2027 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கை சமா்ப்பித்தல் - மாமன்ற சிறப்புக் கூட்டம் நடைபெறுதல் -தகவல் தெரிவித்தல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் 2026-2027 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கை சமா்ப்பிக்கும் மாமன்ற சிறப்புக் கூட்டம், திருவள்ளுவர் ஆண்டு 2057 / விசுவாவசு வருடம் / மாசி மாதம் 04 ஆம் நாள் திங்கள்கிழமை **( 16.02.2026 ) காலை 10.30 மணிக்கு மணிக்கு** மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் உள்ள விக்டோரியா ஹால் கூட்ட அரங்கில் மாண்புமிகு மேயர் அவா்களின் தலைமையில் நடைபெற உள்ளது.

மேற்படி கூட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு - கூட்டப்பொருள்

(ஒப்பம்) கா. ரங்கநாயகி
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

**நகல் :**

துணை ஆணையாளா்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் , கோயம்புத்தூர் மாநகராட்சி

# மாமன்ற சிறப்புக் கூட்டம்

## நிகழ்ச்சி நிரல்

| | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| | அ) தமிழ்த்தாய் வாழ்த்து | |
| | ஆ) திருக்குறள் வாசித்தல்<br>இ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | 1 |
| **வ.எண்** | ஈ) **தீர்மானத்திற்குரிய பொருள்கள்** | |
| **1** | **பொது கணக்குப் பிரிவு –கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதிகளின் 2025-2026ம் வருட திருத்திய மதிப்பீடு மற்றும் 2026-27ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக.** | **2** |

உ) தேசிய கீதம்

ஊ) நன்றியுரை

ஆ)

## திருக்குறள்

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு.

குறள் - 731

## விளக்கம்

தப்பாமல் விளையும் நிலம், அறிஞர் பெருந்தகையர், தாழ்ந்து போகாது, குறைவின்றி வளரும் பொருட்செல்வம் இவை சிறப்புடைய நாட்டின் நல் உறுப்புக்கள்.

திருவள்ளுவர்.

---

## இ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**பொருள் எண் 1**

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதிகளின் 2025-2026ம் வருட திருத்திய மதிப்பீடு மற்றும் 2026-27ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சியின் பொது நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதிகளின் 2025-2026-ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீட்டிற்கும், 2026-27--ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டிற்கும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 245 நாள். 12,02,2026 ன்படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

எனவே, பொது நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதிகளின் 2025-2026-ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீட்டிற்கும், 2026-27--ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டிற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு – அனுமதிக்கலாம்**

**ந.க.எண். 6242/2025/ பி7**

--------------------------------------------------------------------------------